(1)

No. of Printed Pages : 7

**5351**

SSLC பதிவு எண் | S | E | P | 2 | 0 | 1 | 5 |

# தமிழ் - முதல் தாள்

# Language – Part A – TAMIL – Paper I

(செய்யுள், உரைநடை)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **49** -க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

## பகுதி - 1

I. **உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6x1=6

1. சேக்கிழார் பெருமான் அருளியது _________.
(அ) சிவபுராணம் (ஆ) பெரிய புராணம் (இ) தலபுராணம்

2. "கேழல்" என்பதன் பொருள் _________.
(அ) எருமை (ஆ) புலி (இ) பன்றி

3. நெய்தல் கலியைப் பாடியவர் _________.
(அ) ஓரம்போகியார் (ஆ) நல்லந்துவனார் (இ) கபிலர்

[ திருப்புக

4. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்புக் கற்றுத் தருபவரையும் ________ என அழைப்பர்.
(அ) ஒளிப்பதிவாளர் (ஆ) இசையமைப்பாளர் (இ) இயக்குநர்

5. காந்தியடிகள் ________ என்னும் நாடக நூலைப் படித்தார்.
(அ) அரிச்சந்திரன் (ஆ) சிரவண பிதுர்பத்தி (இ) பக்தப்பிரகலாதன்

6. 'பண்ணொரு தமிழொப்பாய்' எனக் கொ[illegible] பா[illegible]ல் இடம் பெறும் நூல்
(அ) திருவாசகம் (ஆ) திருக்குறள் (இ) தேவாரம்

## பகுதி - 2

II. **கோடிட்ட இடத்தை நிரப்புக.** **6x1=6**

7. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் ________.

8. கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு ________ எனப் பெயரிட்டார்.

9. புறநானூறு ________ நூல்களுள் ஒன்று.

10. தமிழர் மனித வாழ்வை ________, ________ எனப் பிரித்தனர்.

11. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள ________ ஒன்று உண்டு.

12. படப்பிடிப்புக் கருவியை ________ பொருத்துவதும் உண்டு.

## பகுதி - 3

III. **பொருத்துக.** **4x1=4**

13. புள் - குப்பை கூளம்

14. குன்று - சிங்காதனம்

15. அரியாசனம் - மலை

16. செத்தை - பறவை

பகுதி - 4

**IV. விடைக்கேற்ற வினா அமைக்க.** **4x1=4**

17. அம்பேத்கருக்கு இந்திய அரசு பாரத ரத்னா விருது வழங்கியது.

18. வள்ளலாரின் இயற்பெயர் இராமலிங்கர்.

19. தமிழர்கள் அரபு நாட்டுடனும், யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.

20. தொழில் நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன.

பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

பகுதி - 1

V. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **5x2=10**

21. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?

22. செயற்கரிய செயல் செய்வது எப்போது?

23. ''அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்''
யார் யாரிடம் கூறியது?

24. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர்?

25. நன்னெறி விதைகள் யாவை?

26. தேவாரம் - பொருள் எழுதுக.

27. கலம்பக நூல்களுள் முதல் நூல் எது?

[ திருப்புக

பகுதி - 2

VI. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று** வரிகளுக்கு **மிகாமல்** விடையளிக்க. **5x2=10**

28. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய, இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?

29. திரைப்படச் சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை?

30. ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?

31. அணுவைப் பற்றிய கம்பரின் கருத்து யாது?

32. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார்?

33. சத்திய தருமச் சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?

34. ஒவ்வொருவரும் குறைந்தது எக்கல்வித் தகுதியைப் பெற வேண்டும்?

பிரிவு - III

(மதிப்பெண்கள் : 24)

பகுதி - 1

VII. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு **மிகாமல்** விடையளிக்க. **3x4=12**

35. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை?

36. கம்பர் - சிறு குறிப்புத் தருக.

37. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல் வழி தொகுத்து எழுதுக.

38. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

39. 'நிற்க நேரமில்லை' என்று சாலை இளந்திரையன் கூறக் காரணம் யாது?

பகுதி - 2

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3x4=12

40. பெண்ணுரிமையை விளக்குக.

41. அம்பேத்கரின் இலட்சிய சமூகம் எத்தகையது?

42. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.

43. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.

44. பழந்தமிழர் வாழ்வு குறித்து நீவிர் அறிவன யாவை?

பிரிவு - IV

(மதிப்பெண்கள் - 10)

IX. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 5x1=5

45. தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப்படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக் கேள்

(i) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

(ii) தெள்ளமுதின் மேலான முத்திக் கனி எது?

(iii) இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடியெதுகைகளைத் தொகுத்தெழுதுக.

(iv) முத்தமிழ் - விரித்தெழுதுக.

(v) உன்னோ டுவந்துரைக்கும் - பிரித்து எழுதுக.

[ திருப்புக

46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 5x1=5

அம்பேத்கர் 1908 இல் எல்பின்ஸ்டன் பள்ளியில் தம்முடைய உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தார்; பின்னர், பரோடா மன்னர் பொருளுதவியுடன் 1912 இல் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றார்; அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் 1915 இல் முதுகலைப்பட்டமும் 1916 இல் இலண்டனில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டமும் பெற்றார்; பின்னர், மும்பையில் சிறிது காலம் பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றினார்; மீண்டும் இலண்டன் சென்று அறிவியல் முதுகலைப் பட்டமும் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.

**வினாக்கள் :**

(i) அம்பேத்கர் எந்த ஆண்டு உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தார்?

(ii) அம்பேத்கரின் கல்லூரி படிப்புக்குப் பொருளுதவி செய்தவர் யார்?

(iii) கொலம்பியா பல்கலைக்கழகம் எங்குள்ளது?

(iv) அம்பேத்கர் எந்தப் பாடத்தில் முனைவர் பட்டம் பெற்றார்?

(v) அம்பேத்கர் இலண்டனில் எந்தெந்தப் பட்டங்கள் பெற்றார்?

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

## பகுதி - 1

X. கீழ்க்காணும் வினாக்களுக்குப் **பத்து வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்க. 2x8=16

47. (அ) பொருள் செயல் வகை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

அல்லது

(ஆ) அப்பூதியடிகளார் இல்லத்தில் நிகழ்ந்ததனை விவரிக்க.

48. (அ) பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்தெழுதுக.

அல்லது

(ஆ) தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி குறித்து விரிவாக எழுதுக.

பகுதி - 2

49. செய்யுள் வடிவில் விடை தருக. 2+2+3+3=10

(அ) ''காலம்'' எனத் தொடங்கும் குறள்.

(ஆ) 'கொளல்' என முடியும் குறள்.

(இ) 'துன்புள' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

(ஈ) 'இன்று தொட்டிவண்'- எனத் தொடங்கும் சீறாப்புராணப் பாடல்.

-o0o-